S.T.C.// 1296 /2021

PW – 1

பெயர்: முகம்மது அலி ஜின்னா

தேதி: 28.03.2025

<u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 311ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு அதன் பேரில் குறுக்கு விசாரணை</u>

தற்போது என்னிடம் காட்டப்படும் EX P.1 காசேலையில் உள்ள கையொப்பமும், மற்ற விவரங்களும் வெவ்வேறு நேரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கையொப்பம் எதிரியினுடையது, மற்ற விவரங்கள் நான் எழுதியது.

நீதிமன்ற கேள்வி

தற்போது என்னிடம் காட்டப்படும் EX P1 காசோலையில் எண்ணால் எழுதப்பட்டிருக்கும் தொகை யார் எழுதியது என்றால்?

பதில்

எதிரி எழுதியது

காசோலையில் எண்ணால் எழுதப்பட்ட தொகையை நான் தான் எழுதினேன் என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் Ex P3 வழக்கறிஞர் அறிவிப்பு எனது வழக்கறிஞரால் அனுப்பபட்டது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் Ex P3 அறிவிப்பில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுளளது என்றால் 01.08.2021 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கு புகாரிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் 02.08.2021ம் தேதி சட்ட அறிவிப்பை அனுப்பினேன் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

நீதிமன்ற கேள்வி

தற்போது என்னிடம் காட்டப்படும் Ex P4 அஞ்சல் ரசீதில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

பதில் 02.08.2021 ஆகும்

02.08.2021ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

01.08.2021ம் தேதியிட்ட அறிவிப்பிற்கு இந்த வழக்கு இல்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு தான் நான் எதிரிக்கு

எனது வழக்கறிஞர் மூலம்  அனுப்பிய அறிவிப்பின் அசல் என்றால் சரிதான். 01.08.2021 தேதியிட்ட எதிரி பெற்றுக்கொண்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் Ex D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Ex D1ல் மாற்றுமுறை ஆவணசட்டத்தின் படி எதிரிக்கு நோட்டிஸ் அனுப்புவது, பணம் செலுத்த அறிவிப்பு  அனுப்புவது 15 நாள்கள் கால அவகாசம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ஒரு வாரம் போட்டுள்ளது. EX P3ல் இரண்டாவது பக்கத்தில் 3வது பத்தியில் எதிரிக்கு தெரியாமல் 15 நாள்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

எதிரி எனக்கு பள்ளித்தோழரோ, கல்லூரித் தோழரோ, உறவுக்காரரோ இல்லை என்றால் சரிதான். எதிரியை எந்த தேதியில் நான் முதன்முதலில் பார்த்தேன் என்றால் 6/7 வருடங்களுக்கு முன்பு பார்த்தேன். தேதி ஞாபகம் இல்லை. எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றோ, அவருக்கும் எனக்கும் என்ன தொழில் உறவு என்று புகாரிலும் அறிவிப்பிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ரூ.4,75,000/- எனக்கு என்ன வகையில் கிடைத்தது என்று புகாரிலும், அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 3 குழந்தைகள். எனது குழந்தைகள் என்ன படிக்கிறார்கள் என்றால் முதல் குழந்தை திருமணம் செய்து கொடுத்து விட்டேன், இரண்டாவது குழந்தை நல்லமணி கல்லூரியில் படிக்கிறது. மூன்றாவது குழந்தை இடைகால் மீனாட்சி பள்ளியில் 6ம் வகுப்பு படிக்கிறது. 3 குழந்தைகளுக்கு தந்தையாக இருந்து திருமணம் முடித்து கொடுத்து படிக்க வைத்து கொண்டிருக்கும் என்னிடம் கையிருப்பு பணம் எதுவும் இருக்காது என்றாலும் எனக்கு கடன் தான் இருக்கும் என்றாலும் சரியல்ல.

எதிரியை என்றைக்காவது நான் சங்கரன்கோவிலில் வைத்து பார்த்தது உண்டா என்றால் ஆமாம். பலமுறை பார்த்துள்ளேன். எதிரியை கடைசியாக என்றைக்கு பார்த்தேன் என்றால் பணம் கொடுத்த பிறகு பார்க்கவில்லை, காசோலை தந்து கேஸ் ஆனதற்கு பிறகு பார்க்கவில்லை. கடைசியாக சங்கரன்கோவிலில் எதிரியை பார்த்த போது காலை 10 மணி இருக்குமா, 8 மணி இருக்குமா என்றால் 11மணி இருக்கும். எனது அறிவிப்பில் கண்ட படி எதிரியிடம் பணம் கேட்ட போது வங்கியில் பணம் உள்ளது அதனால் காசோலை தருகிறேன் என்று எதிரி சொன்னார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வங்கியில் பணம் உள்ள நேரத்தில் எதிரியும், சங்கரன்கோவிலில் இருந்த போது பணத்தை வாங்காமல் காசோலை வாங்கினேன் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் அறிவிப்பும், புகார் மனுவும், முதல் விசாரணை

வாக்குமூலமும் மாற்றுமுறை ஆவணசட்டத்தின் படி பிழையானது என்றாலும், எனது புகார் மனுநிலைக்கதக்கது அல்ல என்றாலும சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் எந்த காலத்திலும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து மோசடியாக பணம் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi